## அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – 2010 ஆம் ஆண்டு

இவ் அறிக்கை இரு பகுதிகளைக் கொண்டதாகும்.

பகுதி 1 - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

பகுதி 2 – ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை.

## பகுதி I

## அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | திணைக்களப் பெயர் |
|---|---|
| 304 | வளிமண்டலவியல் திணைக்களம் |

### 2. வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களினால் வருடாந்த செயற்பாட்டுத்திட்டங்கள் கணக்காண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 3. கணக்குகள்

### 3.1 ஒதுகீட்டுக் கணக்கு

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்குரிய 02 ஒதுக்கீட்டுக் கணக்குகள் 2011 ஏப்ரல் 04 ஆந் திகதியளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

| அமைச்சு/திணைக்களம் | ஒதுக்கீட்டுத் தலைப்பு | சமர்ப்பிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 106 | 2011 ஏப்ரல் 04 |
| வளிமண்டலவியல் திணைக்களம் | 304 | 2011 ஏப்ரல் 01 |

## (ஆ) மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 1,484,077,000 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 1,262,943,498 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் திணைக்களங்களினதும் மொத்தத் தேறிய ஏற்பாட்டில், தேறிய சேமிப்பு ரூபா 77,009,445 தொகைக்கும் ரூபா 144,124,057 தொகைக்கும் இடையிலான வீச்சில் அதாவது மொத்த ஏற்பாட்டில் நூற்றுக்கு 11 இற்கும் 28 இற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு /திணைக்களம் | தேறிய ஏற்பாடு | | பயன்பாடு | | சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழு பவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 106 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 482,777,000 | 730,980,000 | 457,426,890 | 612,206,053 | 25,350,110 | 118,773,947 |
| 304 | வளிமண்டலவியல் திணைக்களம் | 149,680,000 | 120,640,000 | 144,808,682 | 48,501,873 | 4,871,318 | 72,138,127 |
| | மொத்தம் | 632,457,000 | 851,620,000 | 602,235,572 | 660,707,926 | 30,221,428 | 190,912,074 |

## 3.2 முற்பணக் கணக்குகள்

### 3.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட வேண்டிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான 02 முற்பணக் கணக்குகள் 2011 மார்ச் 31 அளவில் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) எல்லைகளுடன் இணங்குதல்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களிற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

| அமைச்சு /திணைக்களம் | விடய இல. | ஆகக் கூடிய செலவின எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய வரவு மீதி எல்லை | உள்ளபடியானது |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 10601 | 4,000,000 | 2,447,657 | 1,600,000 | 2,568,254 | 11,500,000 | 11,273,739 |
| வளிமண்டலவியல் திணைக்களம் | 30401 | 12,000,000 | 12,040,101 | 6,700,000 | 8,951,164 | 55,000,000 | 36,923,528 |

## 3.3 கட்டு நிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 3.3.1 கட்டுநிதிக் கணக்குகள்

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்குகளில் ஒரு வருடத்திற்கும் குறைவான காலமாக ரூபா 395,820 தொகையான வரவு மீதி காணப்பட்டது.

### 3.4.2 பொது வைப்புக் கணக்கு

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19,608,438 ஆக இருந்ததுடன் இது தொடர்பான காலப்பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

| அமைச்சு | தலைப்பு | கணக்கு இல. | காலப்பகுப்பாய்வு | | | | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 ஆண்டிற்கு உட்பட்டவை | 1 ஆண்டிற்கு மேற்பட்டவை 2 ஆண்டுகளுக்கு உட்பட்டவை | 2 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை 5 ஆண்டுகளுக்கு உட்பட்டவை | 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை | |
| | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 106 | 6000/0015/20 | 14,711,502 | -- | -- | -- | 14,711,502 |
| வளிமண்டலவியல் திணைக்களம் | 304 | 6000/003/558 | -- | -- | 722,948 | -- | 727,948 |
| | 304 | 6000/0015/0159 | 2,794,392 | 1,374,596 | -- | -- | 4,168,988 |

## பகுதி II

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குரிய விபரமான அறிக்கை

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 106 - அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணைக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 செப்தெம்பர் 07 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண இணைக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான நிதி அறிக்கை, இணைக்கக் கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில்

சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடு தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண இணக்கக் கூற்று, இதன் (அ) முதல் (ஆ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.6 வரையான பந்திகளில் குறப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர்ந்தவை, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) கணக்குகள் சமர்ப்பித்தல்

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 212,106,517 ஆனதுடன் அமைச்சினால் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் முறையாக நாளது வரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | கணனி உதிரிப் பாகங்கள் மற்றும் | 2002 நவம்பர் 28 ஆம்திகதிய ஐஏஐ/2002/02 | கணனி உதிரிப் பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் |

| | | |
|---|---|---|
| மென்பொருட்களின் பதிவேடு | ஆம இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | தொடர்பாக வேறான நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

(i) 08 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,435,000 கூட்டுத்தொகையான முழுத் தேறிய ஏற்பாடும் சேமிப்பாகவிருந்தது.

(ii) 16 செலவின விடயங்களுக்காக மிகையாக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதை அடுத்தான சேமிப்பு ஏற்பாட்டின் 40 சதவீதத்திற்கும் 96 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் இருந்தது.

(iii) நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ஒரு செலவின விடயத்திற்கு ரூபா 8,432,500 தொகையான ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் இதில் 75.73 இற்கு அதாவது ரூபா 10,929,553 தொகையான ஏற்பாடுகள் எஞ்சியிருந்தன.

(iv) குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் பெறப்பட்டிருந்த ரூபா 50,000,000 தொகையான ஏற்பாட்டில் ஆண்டின் இறுதியில் இதில் 12 சதவீதம் அதாவது ரூபா 6,053,256 தொகையான ஏற்பாடு எஞ்சியிருந்தது.

## 1.4. சொத்துக்கள் முகாமைத்துவம்

**வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்**

அனர்த்த நிவாரண சேவைகள் நிறுவகம் 2010 மே மாதம் முதல் அமைச்சின் கீழ் கையேற்கப்பட்டிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் அந் நிறுவகத்தின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கையேற்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதியும் கணிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

## 1.5 வங்கிக் கணக்குப் பேணலிலான குறைபாடுகள்

### சீராக்கப்பட வேண்டிய மீதி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட சீராக்கங்கள் தொடர்பான விளக்கங்களின் படி கண்டறியப்பட்ட தகவல்கள் பின்வருமாறாகும்.

6 மாதங்களுக்கு கூடிய 1 வருடத்திற்குக் குறைவான காலம் முதல் நிலவும் வழங்கப்பட்ட ஆனால் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 7,400 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நி.பி. 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் வெற்றிடமும்

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 20 | 16 | 4 |
| (ii). | மூன்றாம் நிலை | 4 | 3 | 1 |
| (iii). | இரண்டாம் நிலை | 74 | 58 | 16 |
| (iv). | ஆரம்ப நிலை | 74 | 29 | 18 |
| | மொத்தம் | 145 | 106 | 39 |

## 2. ஒதுக்கீட்டு தலைப்பு – 304 - வளிமண்டலவியல் திணைக்களம்

வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 செப்தெம்பர் 07 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

## 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கண்களிப்பு உத்தியோகத்தரினதும் கணக்களிப்பு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்ற வகையிலான நிதி அறிக்கை, இணக்கக்கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடு தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், காலநிலைத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களில் (அ) முதல் (உ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 முதல் 2.10 வரையான பந்திகளில் குறப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர்ந்தவை, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

திணைக்களத்தினால் 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கு உரித்தான ஒதுக்கீட்டுக் கணக்குகளின் பிரகாரம் ரூபா 435,352,326 தொகையான நிலையான சொத்துக்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் பதியப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) பாதீட்டு முரண்

(i) செலவின விடயங்கள் 02 இற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,080,000 தொகையான முழுத் தேறிய ஏற்பாடும் சேமிப்பாகவிருந்தது.

(ii) 04 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதை அடுத்து மிகுதி தேறிய ஏற்பாடு 63 சதவீதத்திற்கும் 91 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

### (இ) கட்டுநிதிக் கணக்குகள்

(i) நிதிப் பிரமாணம் 371 இற்கு முரணாக குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி வழங்கப்பட்டு பணி முடிவுற்று 01 முதல் 02 மாதங்கள் வரையான காலதாமதத்துடன் கட்டுநிதி தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் அவதானிக்கப்பட்டன.

(ii) குறித்த பணிக்காகச் செலவிடப்படும் நிதி தொடர்பான சரியான மதிப்பீடின்றி 09 சந்தர்ப்பங்களின் போது ரூபா 77,625 தொகையான குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி மதிப்பீடு தேவைக்கு அதிகமான அளவில் வழங்கப்பட்டிருந்தது.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

2 ஆண்டுகள் கடந்திருந்த ரூபா 727,948 தொகையான 05 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்ளுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

30401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்ளுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவிடப்படுவதற்கு நிலுவையான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 291,879 ஆனதுடன் இந் நிலுவை மீதி அறவிடப்படும் பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையில் காணப்பட்டது.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) விளைவற்ற சொத்துக்கள்**

வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 10 மில்லியன் பெறுமதியான திருகோணமலை கடற்படை முகாமில் பொருத்தப்பட்ட ரேடார் இயந்திரத்தின் மூலம் 1982 முதல் 1993 வரையான காலப்பகுதியின் போது மேற்கு வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட சூறாவளி அதிகரிப்பு மற்றும் போக்குவரத்து தொடர்பான தொடர்ச்சியான எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன் இது இலங்கை கடற்கரையைத் தாக்குவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னர் வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு எச்சரிக்கை விடுப்பதற்கு இயலுமை இருந்தது. இவ் உபகரணம் செயற்படாதிருந்ததை அடுத்து 2005 ஆம் ஆண்டின் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதனை அடுத்து இவ்

உபகரணத்திற்காக எவ்வித பழுதுபார்ப்புகளும் மேற்கொள்ளப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புகள் மேள்கொள்ளப்பட்டன.

(i) 2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/ மெய்மையாய்வுச் சபை/ 01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளரின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2011 மார்ச் 31 இற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அறிக்கை 2011 மே 31 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2010 ஆம் ஆண்டிற்கு உரித்தான மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பாகவும் வேறு பரிந்துரைகள் தொடர்பாகவும் உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிககை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **சுற்றறிக்கை ஏற்பாடுகள்** | | |
| **நிதிப் பிரமாணங்கள் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சுச் சுற்றறிக்கை** | | |
| நி.பி. 225 மற்றும் 1996 ஏப்ரல் 20 ஆம் திகதிய எம்எப்/6/1/1/96 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.1.4 ஆம் பிரிவு | 521,375 | 09 உத்தியோகத்தர்களினால் தமது வெளிநாட்டுப் பயணத்திற்கு முன்னர் முற்பணத்தைப் பெற்றுக்கொண்ட முற்பணத்திற்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமல் பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| நி.பி. 264 | | முற்பணத் தீர்ப்பனவின் போது இதற்கான எழுத்து மூலச் சான்றுகள், கணிப்பீடு தீர்ப்பனவு உறுதிச்சீட்டுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் பெற்றுக் கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வின் போது முடியாதிருந்தது. |
| 1996 ஏப்ரல் 20 ஆம் திகதிய எம்எப்/6/1/1/96 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.1.8 ஆம் பிரிவு | | செலவினத்தை ஏற்பதற்காக முற்பணத்தைப் பெறுவதற்கு முன்னர் உரிய உத்தியோகத்தரினால் கட்டாயமாக நாட்டிற்கு வெளியே செல்லும் போது பிரதம மந்திரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பிரதம மந்திரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் உததியோகத்தர் நாட்டை விட்டு வெளியேறியிருந்ததுடன் திணைக்களத் தலைவரினால் இதற்கு முன்னர் லீவு அனுமதிக்கப்பட்டிருந்தது. |
| பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| 2007 செப்தெம்பர் 11 ஆம் திகதிய 21/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 10.9 ஆம் பிரிவு | | நாட்டிற்கு வெளியே செல்வதற்கு தமது திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு லீவு வழங்கப்படுவதற்கு முன்னர், நாட்டை விட்டு வெளியேறுவதற்காக உரிய திணைக்களத் தலைவர் திருப்திகொள்ள வேண்டிய போதிலும் அவ் உத்தியோகத்தர் நாட்டை விட்டு |

வெளியேறியதை அடுத்தே உத்தியோகத்தர்களுக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது.

## 2.6 செயலாற்றல்

2010 வருடாந்த மதிப்பீடு/ செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் வளிமண்டலவியல் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகக் காணப்பட்டது.

**வருடாந்த செயற்பாட்டுத்திட்டத்துடன் இணங்காமை**

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது செயற்பாட்டுத்திட்டத்திற்கு இணங்கும் வகையில் செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) டொப்லர் ரேடார் முறைமை ஸ்தாபிக்கப்படுவதற்காக 2010 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட ஏற்பாடு ரூபா 95 மில்லியன் தொகையாகும். செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இது ஸ்தாபிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2011 யூன் மாதமளவிலும் இந் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களின் போது மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினாலோ அல்லது கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகளுக்கு வளிமண்டலவியலாளர்களைப் பங்கேற்கச் செய்வதற்கு ரூபா 50,000 தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டின் போது அத்தகைய பாடநெறிக்கு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியிராததுடன் மீளாய்வாண்டின் இறுதியிலும் அவ் ஏற்பாடு சேமிப்பாகவிருந்தது.

## 2.7 நட்டங்களும் இழப்புகளும்

திணைக்களத்தின் 10 ஆண்டுகளைப் பார்க்கிலும் கூடிய காலத்தில் இருந்து நிலவி வரும் 7 சந்தர்ப்பங்களுக்கு ரூபா 1,091,458 தொகையான நட்டங்களும் இழப்புகளும் தொடர்பாக நி.பி. 104 மற்றும் 109 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

(அ) வளிமண்டலவியல் மற்றும் வானிலை தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவூட்டுவதற்கு உலக வானிலை விஞ்ஞான அமைப்பினால் 2009 நவம்பர் மாதத்தின் போது ரூபா 1,081,141 தொகை மானியமாகப் பெறப்பட்டிருந்ததுடன் 2009 ஆம் ஆண்டின் போது இதில் ரூபா 111,885 தொகை செலவிடப்பட்டு ஒரு மாநாடும், 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 534,005 தொகை செலவில் 03 மாநாடுகளும் நடாத்தப்பட்டிருந்தன. ரூபா 435,251 தொகையான மிகுதித் தொகை உலக வளிமண்டலவியல் அமைப்பிற்கு மீள அனுப்பப்பட்டிருந்தது. மாநாட்டின் ஏற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்ட உத்தியோகத்தர் கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டிற்குச் சென்றுள்ளமை திணைக்கள உத்தியோகத்தர்கள் கடமைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஈடுபடுத்த நேரிட்டமையாலும் விவசாயிகள் மற்றும் விவசாய உத்தியோகத்தர்களை ஒருங்கிணைத்துக் கொள்வதில் ஏற்பட்ட சிரமங்களையும் இதற்குக் காரணமாக திணைக்களம் குறிப்பிட்டிருந்தது.

(ஆ) தன்னியக்க வளிமண்டலவியல் முறைமை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் விரைவாக தற்போதைய தரவுகளைப் பெறுவதற்காகவேயான போதிலும் இம் முறைமையின் குறைபாடுகள் காரணமாக 2010 ஆம் ஆண்டின் போதும் மேற்குறித்த நோக்கங்களை அடைவதற்கு திணைக்களம் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) பிராந்தியக் காரியாலயங்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் சேவையில் ஈடுபட்ட பதவியணியினரையும் ஆய்வு செய்கையில் 08 பிராந்தியக் காரியாலயங்களில் 09 பேரினதும் ஒரு சிற்றூழியரினதும், மாற்று சிற்றூழியர்கள் 05 பேரினதும் வெற்றிடம் நிலவியமை

அவதானிக்கப்பட்டது. இவ் வெற்றிடம் காரணமாக பிராந்தியக் காரியாலயங்களின் செயற்பாடுகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்படுவதற்கும் வழங்கப்படும் தரவுகளில் நம்பிக்கையும் சரியானதன்மை தொடர்பாகவும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

## 2.9 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் வெற்றிடமும்

வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 1 | 1 | 0 |
| (ii). | மூன்றாம் நிலை | 40 | 33 | 7 |
| (iii). | இரண்டாம் நிலை | 231 | 186 | 45 |
| (iv). | ஆரம்ப நிலை | 85 | 75 | 10 |
| | மொத்தம் | 357 | 295 | 62 |

### (அ) வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிராமை

திருகோணமலை பிரதேச செயலகத்தில் இருந்து திணைக்கள உத்தியோகத்தர்கள் விலக்கப்பட்டிருந்ததுடன் 2011 யூன் இல் உள்ளவாறு மீள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 உள்ளகக் கட்டுப்பாடு

**உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தினால் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படுகையில் மொத்தச் செயற்பாடும் பூர்த்தியாகும் வகையில் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்திற்கு பிரதேசக் காரியாலயங்களின் நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.